சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 13.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண்கள். (1) SA 7000/E/2024 (2) SA 8399/E/2024 (3) SA 8400/E/2024 (4) SA 8401/E/2024 (5) SA 8402/E/2024 (6) SA 8403/E/2024 (7) SA 8404/E/2024**

திரு.அ.சிவராஜ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சிர்,
வட்டாட்சியர் அலுவலகம், முசிறி வட்டம், பொது அதிகார அமைப்பு
திருச்சி மாவட்டம் - 621 211.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.மொ.கண்ணன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், முசிறி அவர்கள் இவ்வாணையத்தில் 13.04.2026-ல் நேரில் ஆஜராகி, மேல்முறையீட்டு அலுவலர், மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் 02.04.2026 தேதியிட்ட அறிக்கையினை சமர்ப்பித்தார்.

2. இவ்வழக்குகளில் மனுதாரர் கோரியுள்ள தகவல் தொடர்பாக, 28.01.2026 தேதியிட்ட உத்தரவில், ***மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சி அவர்கள்****, இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், முசிறி வட்டம், திண்ணனூர் கிராம புல எண்கள் 968/18, 968/19, 968/20-ல் முசிறி வருவாய் கோட்டாட்சியர், அவர்களின் செயல்முறைகள் நி.மு.அ6/1455/2024, நாள் 07.08.2024-ன்படி வழங்கப்பட்ட பட்டாக்களை ரத்து செய்தது தொடர்பாக மனுதாரர் திரு.அ.சிவராஜ் என்பவரின் மேல்முறையீட்டு மனு மீது*

*மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை மற்றும் இறுதி உத்தரவு குறித்த அறிக்கையினை இவ்வாணையத்தில் சமர்ப்பிக்கவும், மேலும், மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட இறுதி உத்தரவின் நகலினை, மனுதாரருக்கு தகவலாக வழங்கவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

3. அதன்படி, 02.04.2026 தேதியிட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், மனுதாரரின் மேல்முறையீட்டு மனு தொடர்பாக மனுதாரருக்கு விசாரணை அழைப்பாணை அனுப்பப்பட்டு, 27.12.2024 அன்று மாவட்ட வருவாய் அலுவலரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி விசாரணையின்போது 2015-ஆம் வருடத்திற்கான ஆவணங்கள் மட்டுமே மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், இதர ஆவணங்களை தாக்கல் செய்திட மனுதாரரால் ஆறுமாத கால அவகாசம் கோரப்பட்ட நிலையில் ஆவணங்களை சமர்ப்பித்திட மனுதாரருக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டதாகவும், ஆறு மாத கால அவகாசம் அளிக்கப்பட்டிருந்த நிலையில் நாளதுவரை மனுதாரரால் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், இந்நேர்வில் முசிறி வட்டம்,திண்ணனூர் கிராமம், நத்தம் புல எண்கள் 968/18 மற்றும் 968/20 நிலம் தொடர்பாக உரிய ஆவணங்களை சமர்ப்பித்திட தெரிவித்து 11.03.2026 தேதியிட்ட மேலெழுத்து மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இந்நேர்வில் தற்சமயம் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் மனுதாரர் மற்றும எதிர் மனுதாரர்களை அழைத்து விசாரணை செய்ய இயலாது என்பதால், தேர்தல் நடத்தை விதிகள் விலக்கி கொள்ளப்பட்ட பின்பு 11.03.2026 தேதியிட்ட தங்கள் அலுவலக கடிதத்தில் கோரியுள்ளவாறு, முசிறி வட்டம், திண்ணனூர் கிராம புல எண்கள் 968/18, 968/19, 968/20 ஆகியவைகளுக்கான உரிய அசல் ஆவணங்களை மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டவுடன் மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்தும், விசாரணை மேற்கொண்டும் ஆணை பிறப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

4. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கையினை ஆணையம் ஏற்று, இவ்வழக்கில் மனுதாரரின் மேல்முறையீட்டு மனு தொடர்பாக மனுதாரரால் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில், சட்டத்திற்குட்பட்டு, அதன் மீது மேற்கொள்ளப்பட்ட இறுதி நடவடிக்கை குறித்த தகவல்களை, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், முசிறி வட்டம் அவர்கள் வாயிலாக மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான அறிக்கையினை 10.06.2026-க்குள் இவ்வாணையத்திற்கு முகவரியிட பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், முசிறி அவர்களுக்கு உத்தரவிட்டு, **இவ்வழக்கானது முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். (1) SA 7000/E/2024</u>**
**<u>(2) SA 8399/E/2024 (3) SA 8400/E/2024</u>**
**<u>(4) 8401/E/2024 (5) SA 8402/E/2024</u>**
**<u>(6) SA 8403/E/2024 (7) SA 8404/E/2024</u>**
**<u>பெறுநர்</u>**

மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சிர்,
வட்டாட்சியர் அலுவலகம், முசிறி வட்டம்,
திருச்சி மாவட்டம் - 621 211.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**
திரு.அ.சிவராஜ், த/பெ.வி.அருணாசலம்,
5/12, மேற்கு தெரு, இலுப்பையூர்
திண்ணனூர் (மஜிரா), முசிறி தாலுக்கா,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 621 006.

Copy to: File MP/PA**,**